DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No. 187/2018

Prosecution side witness for P.W.8

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு. கார்த்திக்** | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **06.08.2025.**

A2 and A4 are present. A3 produced.

<u>முதல்விசாரணை:–</u>

நான் கடந்த 11 வருடங்களாக துாத்துக்குடி மாவட்டம், மாப்பிள்ளையூரணி பகுதியில் கிராம உதவியாளராக பணியாற்றி வருகிறேன். 2017 ஆம் வருடம் என்னுடன் திரு.வேலுச்சாமி என்பவர் கிராம நிர்வாக அதிகாரியாக பணியாற்றி வந்தார். அவர் தற்போது வயது முதிர்வின்காரணமாக இறந்துபோய்விட்டார். 24.01.2017 அன்று தாளமுத்துநகர் காவல்நிலையத்திலிருந்து ஆய்வாளர் கிராம நிர்வாக அதிகாரிக்கு போன் செய்து ஒரு எதிரி மாரிமுத்துவை காவலில் வைத்திருப்பதாகவும், வழக்கு சம்மந்தமாக சாட்சியாக இருக்க என்னையும், கிராம நிர்வாக அதிகாரியையும் அழைத்தன்பேரில் அன்றையதினம் மாலை சுமார் 5.00 மணியளவில் நானும், திரு.வேலுச்சாமி கிராம நிர்வாக அதிகாரியும் ஆஜரானோம். எதிரி மாரிமுத்துவை எங்கள் முன்னிலையில் ஆய்வாளர் விசாரணை செய்தார். அப்போது அவர் ஒரு வாக்குமூலம் கொடுத்தார். அந்த வாக்குமூலத்தில் கஞ்சா விற்ற விரோதம் சம்மந்தமாக சங்கர்ராஜா என்பவரை பலகையால் அடித்து கொன்றுவிட்டதாகவும், தன்னை அழைத்து சென்றால் அவரது வீட்டில் கஞ்சா வைத்திருப்பதாகவும், அதனை எடுத்து ஆஜர் செய்வதாகவும் கூறினார். அதன்பேரில் நானும், கிராம நிர்வாக அதிகாரியும், காவல் அதிகாரிகளும் எதிரியுடன் எதிரியின் வீடான தாய்நகர், கலைஞர் நகருக்கு சென்று அங்கு எதிரி கூரையில் பாலிதீன் கவரில் இருந்த சுமார் 500 கிராம் கஞ்சா எடுத்து ஆஜர் செய்ததை ஆய்வாளர் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றிக்கொண்டார். அந்த அத்தாட்சி நானும், கிராம நிர்வாக அதிகாரியும், எதிரியும் கையெழுத்து செய்து கொடுத்தோம். அந்த அத்தாட்சி நீதிமன்றத்தில்

காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ–9** ஆகும். அதில் கிராம நிர்வாக அதிகாரி முதலாவதாக கையெழுத்து செய்து கொடுத்துள்ளார். அதன்பிறகு அந்த கைப்பற்றிய கஞ்சாவிலிருந்து 50 கிராம் கஞ்சாவை மாதிரிக்காக ஆய்வாளர் தனியாக எடுத்துக்கொண்டார். எதிரி மாரிமுத்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ–10** ஆகும். அதில் கிராம நிர்வாக அதிகாரி முதலாவதாக கையெழுத்து செய்து கொடுத்துள்ளார். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்குவிசாரணை (2, 3, 4 எதிரிகள்தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என சொல்லப்பட்டது)